இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 04/2015
எனது இல. PA/CS/6/4 அ.மு.உ - 111
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.
2015.11.19

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் / பிரதேச செயலாளர்களுக்கும்,

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 111 ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை.**

2007.12.10 ஆந் திகதியில் இருந்து 2011.04.11 ஆந் திகதி வரை ஆட்சேர்க்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 111 ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களுக்கு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது குறிப்பிட்டபடி நடாத்தப்படாமை காரணமாக, அப் பரீட்சையில் சித்தியடைவதற்கான குறித்த சலுகைக் காலம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

02. 2010.09.01 ( கிழக்கின் எழுச்சி – வடக்கின் வசந்தம் ஆகியவற்றின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள்), 2011.05.02, 2011.07.01, 2011.09.15 மற்றும் 2012.03.01 ஆந் திகதிய அரசாங்க முகாமைத்துவ சேவையின் 111 ஆம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட அனைத்து அலுவலர்கள் தொடர்பாகவும் அவ் வகுப்புக்கு உரியதான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவது தொடர்பாக அவர்களது நியமனத் திகதியில் இருந்து நடாத்தப்படுகின்ற 04 இணைத்தேர்வு தவணைகளுக்கான சலுகைக் காலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்குவதற்கு அரசாங்கசேவை ஆணைக்குழுவானால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| நியமனத்திகதி | சலுகை வழங்குவது தொடர்பாக பரீட்சை நடாத்தப்பட்ட தினங்கள் | நியமனத் திகதி | சலுகை வழங்குவது தொடர்பாக பரீட்சை நடாத்தப்பட்ட தினங்கள் |
|---|---|---|---|
| 2010.09.01<br>2011.05.02<br>2011.07.01 | 2011.10.01 | 2010.09.15<br>2012.03.01 | 2013.01.27 |
| | 2013.01.27 | | 2014.06.29 |
| | 2014.06.29 | | 2015.09.19 |
| | 2015.09.19 | | .................... |

03. அதற்கமைய மேற்படி தினங்களில் நியமனம் பெற்ற அலுவலர்கள், குறித்த 04 பரீட்சைத் தவணைகளுள் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையும் பட்சத்தில், சம்பள ஆண்டேற்றங்கள் ஒத்திவைக்கப் படாததுடன், ஏனைய அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையும் திகதி வரை நன்னடத்தைக் காலம் நீடிக்கப்படும்.

04. மேற்படி 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது சம்பள ஆண்டேற்றங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் நன்னடத்தைக் காலத்தை திருத்தியமைப்பதற்காக தாபனத் தலைவரின் மூலம் கோரும்படி மேலும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம் / கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயம்